பதிவுஎண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 19] சென்னை : கார்த்திகை 25 (11—12—71) சனி வெளியூர் : கார்த்திகை 26 (12—12—71) ஞாயிறு [இதழ் : 150

எதிரியின் இழப்பு

இதுவரை, கடந்த ஆறு நாள் போரில் பாகிஸ்தானின் இழப்பு வருமாறு :—

விமானங்கள்	75
டாங்கிகள்	129
நாசகாரிகள்	3
நீர்மூழ்கிகள்	2
பீரங்கிப் படகுகள்	13

சாம்ப் பகுதியில் கடுமையான போர்

திறமையெல்லாம் காட்டியும் திக்காகான் படை திணறல்

பாகிஸ்தானின் ஐந்தாவது முயற்சியும் படுதோல்வி

புதுடில்லி, டிச 11—

நேற்று வங்க தேசத்தில் டாக்காவை நோக்கி இந்தியப் படைகள் மின்னல் வேகத்தில் முன்னேறிக்கொண்டு வரும்போது, மேற்கில் சாம்ப் பகுதியில் பாகிஸ்தான் படை, தனது மாபெரும் தோல்வியைப் பெற்றிருக்கிறது.

சாம்ப் பகுதியில் பாகிஸ்தான் துருப்புக்கள் அலை அலையாக வந்து--ஏராளமான டாங்கிகளுடன் இந்தியப் படைகளைத் தாக்கின ; விமானப் படையும் அவைகளுக்கு உதவியாக வந்தன.

ஒரு டிவிஷன் காலாட்படை -- 150 டாங்கிகள் -- 72 நடுத்தர, கனரகப் பீரங்கிகள் ஆகியவற்றுடன் எதிரிகள் அங்கு போரைத் துவக்கினர்.

கடந்த 5 நாட்களில் பாகிஸ்தானின் 5-வது முயற்சியாகும் இது ; இந்தத் தடவையும் அது இந்தியப் படைகளின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் பெரும் இழப்புகளுடன் திரும்பி ஓடிற்று.

இதுவரை நடைபெற்ற போரில் இதுவே மிகக் கடுமையான போர் என்று கருதப்படுகிறது ; இந்தப் போரில் இந்தியப் படைக்கும் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது ; ஆனால், பாகிஸ்தானின் சேதம் மிக அதிகமானதாகும்.

கிழக்குக் கரையிலுள்ள இந்தியப் பாதுகாப்பு நிலைகளைப் பிடிப்பதற்குப் பலமுறை எதிரிகள் முயன்றனர் ; ஆனால் இம்முயற்சி முறியடிக்கப்பட்டது.

போர் நடைபெறும் இடத்திலிருந்து சுமார் 26 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அக்னூர் பாலத்தைக் கைப்பற்றுவதே பாகிஸ்தான் தாக்குதலின் குறிக்கோளாக இருந்தது.

இந்திய வீரர்கள் வீரஞ்செறிந்த போராட்டம்

சாம்ப் பகுதியில் எதிரிகளின் கடும் தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

எதிரிகள் ஆற்றுக்கு மறுபக்கம் விரட்டியடிக்கப்பட்டனர்.

எதிரித் தரப்பில் கடும் ஆட் சேதமும் ஏற்பட்டது.

நமது வீரர்கள் வீரஞ்செறிந்த போராட்டத்தை நடத்தியதன் பயனாக நேற்று நள்ளிரவுக்குப் பின் நமக்குச் சாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன.

"இந்தப் போர் நடைபெற்ற பகுதி, பாகிஸ்தானுக்கு மிகவும் சாதகமான இடமாகும்"

என்று இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏராளமான டாங்கிகளைப் பயன்படுத்துவதற்குப் பாகிஸ்தானுக்கு வசதி இருந்ததாம் ; ஆயினும், இந்தியப் பீரங்கிகள் தாக்குதல், எதிரியைப் பின்வாங்கச் செய்தது.

நினைவுக்கு எடுத்துக்காட்டு

1965-ல், சியால்கோட் பகுதியில் நடைபெற்ற புகழ்பெற்ற சண்டையை நினைவுபடுத்துவதாக நேற்றைய சண்டை இருந்ததாகக் கூறப்படுகிறது.

நிலைநாட்டப்பட்ட புகழ்

தோல்வி மேல் தோல்வியைப் பெற்றுவரும் திக்காகானின் இராணுவம் நடத்திய இந்த அசுரத் தாக்குதலும் முறியடிக்கப்பட்டு இந்தியப் படை புகழை நிலைநாட்டியிருக்கிறது.

எதிரிகள் ஓட்டம்

ஜோதபூர், டிச. 11—

ஜெய்சால்மர் பகுதியில் நடைபெற்ற போரில் தோல்வியடைந்து ஓடிய எதிரிகள் 30 பழுதடைந்த டாங்கிகளை விட்டு விட்டுச் சென்றிருக்கின்றனர் ; நல்ல நிலையிலிருந்த இரண்டு டாங்கிகளையும் விட்டுச் சென்றனர் ; இவைகள் அனைத்தும் சீனாவில் செய்யப்பட்டவையாகும்.

இவையன்றி, 70-க்கு மேற்பட்ட ஜீப்புகள் போன்ற வண்டிகளையும் விட்டுச் சென்றிருக்கின்றனர்.

போர்க்களப் பகுதியில் யாகியா கான்

தோல்வி பற்றி ஆராய்ச்சி

மேற்குப் போர்முனை, டிச. 11—

இந்தியா -- பாகிஸ்தான் படைகள் கடுமையாகப் போரிட்டு வரும் சாம்ப் பகுதிக்கு ஆதிக்க வெறியர் யாகியா கான் சென்றிருந்ததாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

1965-ல் இங்கு நடைபெற்ற போரின்போது இப்பகுதியில் பாகிஸ்தான் படைகளுக்குத் தலைமை தாங்கி நின்றவர் ஜெனரல் யாகியா கான் என்பது நினைவு கூரத்தக்கது.

1965 போரின்போது தமக்குக் கிடைத்த வெற்றி தற்போது பாகிஸ்தான் படைகளுக்கு ஏன் கிடைக்கவில்லை என்பதை நேரில் கண்டறியவே அவர் இப்பகுதிக்குச் சென்றிருந்ததாகத் தெரிகிறது.

போர் நிறுத்தப் பேச்சுக்குப் பொருளே இல்லை

வங்காளதேசப் பிரச்னை முதலில் தீர்க்கப்படட்டும்

சுவரண் சிங் விளக்கம்

இலண்டன், டிச. 11-

"வங்காள தேசப் பிரச்சினையின் மூலகாரணத்தை கண்டறிந்து தீர்வு காணுவதை விட்டுப் போர் நிறுத்தம் பேச்சு வார்த்தை என்பது நடைமுறைக்கு ஒவ்வாதது"

என்று, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. சுவரண் சிங், ஐ. நா.-வுக்குச் செல்லும் வழியில் இங்கு செய்தியாளர்கட்கு அளித்த பேட்டியில் தெளிவுபடுத்தினார்.

"வங்காள தேசப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளாத எந்தப் பேச்சும் பயனற்றது" என்றார் அவர்.

"இந்தியாமீது ஆக்கிரமிப்பை மேற்கொண்ட பாகிஸ்தானே, போர் நிறுத்தம்பற்றிப் பேசுவது வியப்பாக உள்ளது" என்றார்.

"இந்தியாவைப் பொறுத்தவரை போரை நிறுத்துவதுபற்றித் தக்க தருணம் வரும்போது யோசிக்கும்" என்றார்.

"வங்காள தேசத்தில் போர் முடிந்தபின், அங்கு ஒரு நாள் கூட நாங்கள் தங்கியிருக்க மாட்டோம்" என்றும் அவர் கூறினார்.

டாக்காமீது இறுதித்தாக்குதல்

புதுடில்லி, டிச. 11—

டாக்கா நகர்மீது இறுதித் தாக்குதலைத் தொடுக்க நமது படை ஆயத்தமாகிவிட்டது.

எதிரிகள் தப்பிச் செல்வதற்கு இருந்த வழிகளெல்லாம் அடைக்கப்பட்டுவிட்டன.

வங்க தேசத்தில் பல பகுதிகளையும் இந்தியப் படையும் -- விடுதலைப் படையும் சேர்ந்து மீட்டு வருகின்றன.

டாக்காவைத் தாக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன ; அங்கு இந்தியத் துருப்புக்கள் செல்ல முடியாதபடி, ஆற்றுப் பாலத்தைப் பாகிஸ்தான் துருப்புக்கள் தகர்த்திருந்தன ; ஆகவே, ஹெலிகாப்டர் மூலமாக இந்தியத் துருப்புக்கள் கொண்டு செல்லப்பட்டன ; இப்போது அங்கு புதிய ஒரு பாலத்தை எஞ்சினீயர்கள் கட்டி முடித்துவிட்டு ஒரு சாதனை புரிந்திருக்கின்றனர் ; நமது முன்னேற்றத்துக்கு இது பேருதவியாக அமைந்துவிட்டது.

வங்க தேசத்துடன் உடன்படிக்கை

ஒருவருக்கொருவர் உதவி செய்யும் வகையில் நேற்று இந்தியாவும்—வங்க தேசமும் உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டன ; இந்த உடன்படிக்கை இரு நாடுகளும் இணைந்துநின்று போர் புரியவும்—சமூக நிலையை நிலை நிறுத்தவும்—அமைதியை ஏற்படுத்தி அகதிகள் தாயகம் திரும்பவும் வகைசெய்கிறது.

பயமுறுத்துவதற்காக அல்ல-பாதுகாப்புச் சட்டம்

காரணம் ஏதுமில்லாமல் அது பயன்படுத்தப்படமாட்டாது

சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் உறுதி

'விமர்சனம்' என்ற பெயரால் வீண் பழி சுமத்திய 'நவசக்தி' ஏடுபற்றி நிலைமை விளக்கம்

சென்னை, டிச. 11—

"பாதுகாப்புச் சட்டம் யாரையும் பயமுறுத்துவதற்குப் பயன்படுத்தப்படமாட்டாது" என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று சட்டப் பேரவையில் தெளிவுபடுத்தினார்.

'நவசக்தி' நாளிதழின் ஆசிரியர் -- துணையாசிரியர் ஆகியவர்கள் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டதையொட்டி விவாதிக்க பேரவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டும்--என்று எதிர்க் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடாரும், வலது கம்யூனிஸ்டுத் தலைவர் கே. டி. கே. தங்கமணியும் கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்து முதலமைச்சர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

முதல்வர் கலைஞர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

"ஆளுங்கட்சியையும் -- அரசையும் தேசத் துரோகக் குற்றஞ் சாட்டி எழுதுவது விமர்சனம் ஆகாது ; அந்தப் பத்திரிகை என்மீதும் -- ஆளுங் கட்சிமீதும் குற்றஞ்சாட்டியிருப்பது நாட்டுப் பாதுகாப்புக்கு உகந்ததில்லை.

"அமெரிக்க அரசு நமக்கு ஆதரவளிக்காவிட்டாலும், அமெரிக்க மக்கள் நம்மீது ஆதரவு காட்டி வருகிறார்கள் ; அந்த மக்கள் மீது நமக்கு நம்பிக்கை இருக்கிறது என்று கூறியது, அமெரிக்காவுக்கு வக்காலத்து வாங்குவதாகாது.

"ஆளுங்கட்சிமீது பழிசுமத்துவது பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுவிழக்கச் செய்யவே உதவும்."

முதல்வரின் விளக்கத்துக்குப் பின், ஒத்திவைப்புத் தீர்மானம் பேரவைத் தலைவரால் தள்ளுபடி செய்யப்பட்டது.

பாகிஸ்தானலேயே போர் மூண்டது

ஜப்பான் அரசிடம் இரஷ்யத் தூதர் விளக்கம்

"இந்தியா—பாகிஸ்தானிடையே மூண்டுள்ள போருக்குக் காரணம், பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர்களின் போக்கே யாகும்"

என்று டோக்கியோவிலுள்ள சோவியத் தூதுவர் ஜப்பான் அரசுக்கு எடுத்துரைத்துள்ளார்.

டோக்கியோவிலுள்ள சோவியத் தூதுவர் ஜப்பான் வெளியுறவு அமைச்சரிடம் இதனைத் தெரிவித்தார்.

புறத்தே இருக்கின்ற பகைவருடன் போரிடும் நேரம் இது!

நாட்டின் அகத்தே பொருளாதார வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவது அவசியம்

நிதி வசதிகளைத் திரட்டும் பணியும் -- செலவினங்களில் சிக்கன முயற்சியும் முக்கியத்துவம் பெறுகின்றன

திட்டங்களைத் தடங்கலின்றிச் செயல்படுத்த முதலமைச்சர் கலைஞர் வேண்டுகோள்

சென்னை, டிச. 10—

"இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் நம்மீது ஏற்பட்டுள்ள சுமையை ஏற்க நாடு முழுவதும் ஒருங்கிணைந்து உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் பல்வேறு மாநிலங்களும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும் என மத்திய அரசு நமக்கு வேண்டுகோள் விடுத்துப் பல்வேறு யோசனைகளைக் கூறியது; அவை திரைப்படக் கட்டண உயர்வு -- குதிரைப் பந்தய நுழைவுக் கட்டண உயர்வு -- குதிரைப் பந்தய வரி உயர்வு -- வாகன வரி உயர்வு -- பரிசுச் சீட்டின்மீது மேல் வரி -- பேருந்துக் கட்டண உயர்வு ஆகியவைகளாகும்.

"இன்றுள்ள சூழ்நிலையில், 'மத்திய அரசிடமிருந்து நமக்குத் திட்டத்திற்காகக் கிட்ட இருக்கும் உதவித் தொகை குறைந்துவிடக் கூடுமோ' என்ற ஐயமும், அதன் விளைவாக நமது மாநிலத்தின் குறைந்த அளவுத் திட்டப் பணியும் பாதிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளன; இந்நிலையில், ஏற்றதொரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நம்மாலான கூடுதல் நிதி வசதிகளை இயன்ற அளவு நாமே திரட்டும் முயற்சியில் ஈடுபடவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

"புறத்தே இருக்கின்ற பகைவர்களுடன் போரிடும் நேரத்தில் நாட்டின் அகத்தே பொருளாதார வளர்ச்சிக்கான பணிகளை நிறைவேற்றிச் செயல்படுத்தத் தக்க நிதி வசதிகளைத் திரட்டும் பணியும், செலவினங்களிலே இயன்ற அளவு சிக்கன முயற்சிகளை மேற்கொள்ளும் பணியும் முக்கியத்துவம் பெறுகின்றன.

"இவ்வாறு, மத்திய அரசின் முயற்சிக்கு ஆதரவாகவும் -- நமது திட்டங்களைத் தடங்கலின்றிச் செயல்படுத்தவும் -- நிதித் திரட்டும் முயற்சிகள் சிலவற்றையும் -- சிக்கன நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது."

இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், சட்டப் பேரவையில், நாட்டை எதிர்நோக்கி நிற்கும் நிலையில் நாம் எடுக்க வேண்டிய சில நடவடிக்கைகளுக்கான அமைச்சரவையின் முடிவுகளை, மன்றத்தின்முன் வைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டித் தெளிவுற விளக்கினார்; அதற்கிணங்க, 1—1—72 முதல் செயல்படுத்தும் வகையில் கீழ்க்காணும் நிதித் திரட்டும் முயற்சிகளை மேற்கொள்ள முடிவு செய்திருப்பதையும் விளக்கினார்; அவை யாவன :—

திரைப்பட நுழைவுச் சீட்டுகள் மீது...

ஒரு ரூபாய் அதற்குக் குறைவாகவும் உள்ள திரைப்பட நுழைவுச் சீட்டுகள்மீது 5 காசும்—அதற்கு மேலுள்ள நுழைவுச் சீட்டுகளுக்கு 10 காசும் கூடுதல்மேல் வரி விதிக்கப்படும்.

குதிரைப் பந்தய நுழைவு சீட்டுகள் மீது...

ரூ. 5 அதற்குக் குறைவாகவும் உள்ள குதிரைப் பந்தய நுழைவுச் சீட்டுகள்மீது 50 காசும், அதற்கு மேற்பட்ட நுழைவுச் சீட்டுகள்மீது ஒரு ரூபாயும் கூடுதல்மேல் வரி விதிக்கப்படும்.

விரைவுப் பேருந்து கட்டணம்

தற்போது தனியார் துறையிலும் -- அரசு நிறுவனத்திலும் உள்ள சாதாரண பேருந்துகள் அனைத்திலும் கிலோமீட்டருக்கு 3 காசு என்ற வீதத்தில் கட்டணம் விதிக்கப்படுகிறது; எனினும், இன்று அரசு விரைவுப் பேருந்துகளில் விதிக்கப்படும் கட்டணம் கிலோமீட்டருக்கு 3 காசுக்கு சற்று அதிகம்; எனவே, இதனைத் தக்கவாறு மாற்றியமைக்கும் வகையில், விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், கிலோ மீட்டருக்கு 4 காசு வீதம் கட்டணம் விதிக்கப்படும்.

முத்திரைத் தாள் வரி

ஆவணங்களின்மீது தற்போதுள்ள முத்திரைத் தாள் வரி மீது இரண்டரை சதவீத கூடுதல் மேல் வரி விதிக்கப்படும்.

வாகனங்கள் மீதான வரி

கார், ஸ்கூட்டர் போன்றவற்றின் மீதான வாகன வரி 10 சதவீதம் உயர்த்தப்படும்.

இவைமூலம் ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ முழு ஆண்டில் ரூ 2 கோடி கிட்டும் என நம்புகிறோம்.

சிறப்புப் பரிசுச் சீட்டு

இவைத் தவிர, சனவரித் திங்களில் பொங்கல் திருநாளை முன்னிட்டு நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு உதவச் சிறப்புப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் ஒன்றும் நடத்தப்படும்; இந்தக் குலுக்கலின் மூலம் ரூ. 1 கோடி அளவிற்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்சாரக் கட்டணம்

மின்சார வளர்ச்சித் திட்டங்களை விரைந்து செயல்படுத்து -- நமது மாநிலமெங்கணும் சிற்றூர்களெல்லாம் ஒளிமயமாக்கும் முயற்சிக்கு நிதி நிறுவனங்களின் உதவியினைக் கோரும்போதெல்லாம் நமது மின்சாரக் கட்டணங்கள் -- மின்சாரம் வழங்குவதற்கு ஆகும் செலவு முழுவதனையும் ஏற்கும் வகையில் உயர்த்திச் சீரமைக்கப்பட வேண்டும் என அங்நிதி நிறுவனங்கள் கூறிவருகின்றன.

நீர் மின்சார வசதிகளைப் பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டு, நமது மாநிலம் கோடை வறட்சி நாட்களில் மின்சார வெட்டில் துன்புற்று வந்த நிலையை மாற்றிட அனல் மின்சார வசதியினைப் பெரும் அளவில் பெருக்கும் முயற்சிகளில் நாம் வெற்றி கண்டுள்ளோம்; இதனால், அண்மைக் காலத்தில் மின்சார வெட்டு ஏதுமின்றி ஆண்டு முழுவதும் தொடர்ந்து மின்சாரம் வழங்கியுள்ளோம்; அதன் விளைவாக, நமது மின்சார உற்பத்திச் செலவுகள் கணிசமாக உயர்ந்துள்ளதை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சிற்றூர்கள் அனைத்திற்கும் விரைந்து மின்வசதி செய்யும் முயற்சியின் விளைவாகவும், பரவலாக பம்புசெட்டுகளுக்கு மின்சார இணைப்புகள் தருவதனாலும் மின்சாரத்தைப் பிரித்து வழங்குவதற்கான செலவுகளும் உயர்வு பெற்றுள்ளன; எனவே, இந்நிலையை நன்கு ஆராய்ந்து, மின்சாரம் பயன்படுத்தப்படும் பல்வேறு துறைகளிலும் -- கட்டண விகிதங்களை ஏற்ற முறையில் அமைப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டது; இக்குழுவினர் வேளாண்மை—தொழில் துறை மற்றும் பல்வேறு துறைகளுக்கான மின்சாரக் கட்டணங்களை உயர்த்திச் சீரமைக்கப் பரிந்துரை செய்துள்ளனர்.

கூடுதல் நிதி வசதிகள் மிகவும் தேவைப்படும் இந்நிலையில், இப்பரிந்துரைகளை 1—1—1972 முதல் செயல்படுத்த அரசுமுடிவு செய்துள்ளது; அதற்கான விவரம் விரைவில் அறிவிக்கப்படும்.

எளியவர்களுக்கு நியாய விலையில் அரிசி

வேளாண்மை வளர்ச்சி பாதிக்கப்பட்டு, உணவுப் பொருட்கள் சரிவர கிட்டாத நிலையில், தமிழக அரசு, படி அரிசித் திட்டத்தைச் செயல்படுத்தியது; கோவை, சென்னை ஆகிய இரு நகரங்களிலும் படி அரிசி வழங்க இப்போது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4 கோடி அளவுக்கு அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது; அரசு தொடர்ந்து எடுத்த தீவிர முயற்சிகளின் விளைவாக வேளாண்மைத் துறையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மாநிலம் முழுவதும் உற்பத்திப் பெருகி -- தாராளமாக உணவுப் பண்டங்கள் கிடைக்கும் இந்நிலையில், படி அரிசித் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவது தேவையா என அரசு ஆராய்ந்தது; படி அரிசித் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ள சென்னை மாநகரப் பகுதியிலும், கோவையிலும் உள்ள எளிய வர்கட்கு நியாய விலையில் அரிசி கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டிய தன் அவசியத்தையும் அரசு உணர்ந்துள்ளது.

எனவே, 1-1-72 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ. 300-க்கும் அதற்குக் குறைவாகவும் ஊதியம் பெறுபவர்கட்கு நியாய விலையில் அரிசி வழங்க ஏற்பாடுகள் செய்து, படி அரிசித் திட்டத்தை மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இன்றுள்ள இக்கட்டான சூழ்நிலையில், நாட்டின் நலன் கருதிச் செய்யப்படும் இம்முயற்சிகள் அனைத்திற்கும் மக்கள் தங்கள் ஒத்துழைப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

நெருக்கடிக்குப் பாகிஸ்தான் போக்கே காரணம்

பிரிட்டிஷ் தொழிற் கட்சி திட்டவட்ட அறிவிப்பு

"இந்தியத் துணைக் கண்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குப் பாகிஸ்தானே காரணம்" என்று பிரிட்டிஷ் தொழிற்கட்சி திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

"வங்க தேச மக்கள் ஒத்துக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வு ஏற்பட வேண்டியது அவசியம்" என்று அது வற்புறுத்தியது.

பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் 'அனைத்துநாட்டு விவகாரக் குழு' கூடி, வங்கதேச நெருக்கடி நிலைமை பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

கிழக்கு வங்க மக்களால் சனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுடன் ஒரு அரசியல் தீர்வு ஏற்படுத்திக்கொள்ளாதது பற்றிப் பாகிஸ்தான் அரசை அந்தத் தீர்மானம் கண்டித்தது.

ஷேக் முஜிபுர் ரகிமானை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்றும், போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்றும் அந்தத் தீர்மானம் கோரியது.

நாட்டுப் பாதுகாப்பு :

கலைஞர் சொல் கேளீர்!

"இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியைப் போர் வீரர்கள் மட்டும் சமாளித்துவிடுவார்கள் என்று நாம் கைகட்டி வாளாயிருத்தல் கூடாது -- அப்படி இருக்கவும் முடியாது; இந்திய நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் நெருக்கடிப் பொறுப்புக்களை உணர்ந்தாக வேண்டும்.

"போர்க் கருவிகளைப் புதிது புதிதாக வாங்குவதற்கும் -- போர்த் தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கும் ஏராளமான பணம் தேவைப்படும்; அதை அட்டியின்றித் தருவதற்கும் இந்தியாவில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் தயாராக இருக்க வேண்டும் -- அதில் தயக்கம் காட்டக் கூடாது.

"அதிலும், தமிழகம் இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்றும் -- தமிழ்நாட்டில் இருக்கிற நாலரைக் கோடி மக்கள்மீதும் நம்பிக்கை வைத்து -- இதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்; போருக்கான நிதியைத் திரட்டுகிற பணியைத் தொடங்கவேண்டும்.

"போர் வீரர்களுக்குத் தேவைப்படுகின்ற மருந்துகளை வாங்கிப் போர்முனைகளுக்கு அனுப்புதல் -- தேவையான உடைகளை வாங்கி அனுப்புதல் -- போர்முனைக்குச் சென்று போரில் ஈடுபட்டிருக்கும் வீரர்களின் குடும்பங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருதல் ஆகிய காரியங்களில் நாட்டில் உள்ள நல்லவர்கள் ஈடுபட வேண்டும்."

(சட்டமன்றத்தில்)

---

7 கோடி மக்களின் கோரிக்கைகளை அலட்சியம் செய்ய முயற்சிப்பதா?

உயிர்வாழும் உரிமைக்குத் துரோகம் செய்வதாகாதா?

மாஸ்கோ, டிச. 11—

"மக்களின் அமைதியையும் -- அடிப்படை உரிமைகளையும் விரும்பும் எவரும் வங்காள தேசத்தில் உள்ள 7 கோடி மக்களின் கோரிக்கைகளை அலட்சியம் செய்ய முடியாது"

என்று, இரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பத்திரிகையான 'பிராவ்தா' வெளியிட்டுள்ள ஒரு விமர்சனம் கூறுகிறது.

"இந்தியா-பாகிஸ்தான் மோதலில் பீகிங் மேற்கொண்டுள்ள நடவடிக்கை, கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் உயிர் வாழும் உரிமைக்காக நடத்தும் போராட்டத்துக்குப் பகிரங்கமாகத் துரோகம் செய்வதாகும்" என்றும் அது கூறுகிறது.

"ஐ. நா.-வில் அமெரிக்காவுடன் சேர்ந்துகொண்டு, பிரச்சினை என்றுமே தீராமல் வைக்கக் கூடிய ஓர் உடன்பாட்டை வங்காள தேசத்தின்மீது சீனு திணிக்கப்பார்க்கிறது; வங்க தேசத்தில் ஒருபுறம், 'மக்கள் போர்' என்ற தத்துவத்தைப் பரப்புகிறது; மற்றொருபுரம் அது, இராணுவ ஆட்சிக்கு உதவி புரிகிறது; இவ்வாறு வங்காள தேசத்தில் இரட்டை வேடம் போடுகிறது" என்றும் அக் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

"அகதிகள் பிரச்சினையைச் சமாளிக்க அனைத்து நாடுகளின் உதவியை இந்தியா கோரியது; உரிய நேரத்தில் உதவியிருந்தால் அபாயமான கட்டத்துக்கு நிலைமை போகாமல் தடுத்திருக்கலாம்; அமெரிக்காவோ, பிரிட்டனோ இவ்வகையில் உதவவில்லை" என்றும் கட்டுரை குற்றஞ்சாட்டுகிறது.

மத்திய அரசு கட்டும் கட்டடங்கள்

தமிழக அரசின் கோரிக்கை

சென்னை, டிச. 9—

"காலியாகவுள்ள மத்திய அரசின் நிலங்களில் கட்டடம் கட்டுவதற்குமுன் மாநில அரசைக் கலந்தாலோசிக்குமாறு, மத்திய அரசிடம் தமிழக அரசு நேரிலும், கடித வாயிலாகவும் கேட்டுக்கொண்டிருக்கிறது"

என்று சட்டப் பேரவையில் தகவல் தரப்பட்டது.

புதியதோர் பொறுப்பு

'வரலாறு நமக்கு அளித்திருக்கிறது'

கடமையை நினைவூட்டுகிறார் வங்க தேசத் தலைமையமைச்சர்

முஜிப் நகர், டிச. 10—

"வங்காள தேச சுதந்தரக் குடியரசு இப்போது ஏற்பட்டுவிட்டது.

"வங்காள தேசத்தில், மேற்குப் பாகிஸ்தான் துருப்புகளின் சட்ட விரோதமான ஆக்கிரமிப்பு முடிவடையும் தருவாயில் இருக்கிறது.

"வரலாறு நமக்கு ஒரு புதிய பொறுப்பை அளித்திருக்கிறது; அதை நாம் கடைசி வரை நிறைவேற்ற வேண்டும்; எதிர்காலச் சந்ததியினர் குற்றச்சாட்டுக்கு ஆளாகும் முறையில் நடந்து கொள்ளக் கூடாது"

என்று வங்காள தேசத் தலைமை அமைச்சர் தாசுதீன் அகமது, வங்காள தேச வானொலியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டுச் சரணடையும்படி அவர் எதிரிப் படைகளையும் -- ரஜாக்கர்களையும் அவர் கேட்டுக்கொண்டார்.

நெல்லை மாவட்டத்தில் விமான நிலையம்

மத்திய அரசின் நிலை என்ன?

சென்னை, டிச. 10—

"திருநெல்வேலி -- தூத்துக்குடி ஆகிய இரண்டு இடங்களுக்கும் மத்தியில், 'வாகைக் குளம்' என்ற இடத்தில் விமான நிலையம் அமைக்கலாம் என்று மத்திய அரசுக்கு யோசனை கூறிக் தமிழக அரசு கடிதம் எழுதியிருக்கிறது; இதற்கு மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது"

என்று சட்டமன்றத்தில், கேள்வி நேரத்தின்போது முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் அறிவித்தார்.

முக்கியக் கேள்விக்குப் பொதுப் பணித்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா பதிலளிக்கையில் கூறியதாவது :—

"நெல்லை மாவட்டத்தில் விமான நிலையம் அமைக்கப்பட்டால் குறைந்தபட்சம் பயணிகள் எண்ணிக்கைக்கு உறுதி கொடுப்பதாக மத்திய அரசுக்கு உத்தரவாதம் தரப்பட்டிருக்கிறது; என்றாலும், இப்போதுள்ள நிதி வசதியைக் கொண்டு இந்த விமான நிலையத்தை உடனடியாக அமைப்பது இயலாது' என்று மத்திய அரசு கூறியிருக்கிறது."

டோக்கியோ, டிச. 10—

இந்தியாவுக்குத் தருவதாக ஒப்புக்கொண்ட 910 இலக்சம் டாலர் (68.15 கோடி) புதிய கடன்களைத் தற்காலிகமாக நிறுத்திவைத்திருப்பதாக ஜப்பான் அரசு அறிவித்திருக்கிறது.

பணமழையில் நனைந்திடக் கணமும் தயங்காதீர்!

கொடுங்கள் ஒரு ரூபாய்! பெறுங்கள் ஒரு லட்சம்!!

ஒரு ரூபாய் கொடுத்து தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்கினுல் உங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசாகக் கிடைக்கலாம்... எனவே

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் பரிசு : ஒரு லட்சம் ரூபாய்

5 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம்	ரூ.	50,000
10 மூன்ருவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம்	ரூ.	50,000
50 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 1000	ரூ.	50,000
1000 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 100	ரூ.	1,00,000

மொத்தப் பரிசுகள் 4264.
மொத்தப் பரிசுத் தொகை ரூ. **14,00,000***

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

குலுக்கல் நாள்: 31-12-71

தமிழ்நாடு பரிசுச் சீட்டு இதுவரை 264 லட்சாதிபதிகளை உருவாக்கியுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு திட்டம், சென்னை-2
* 4 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

'கடமையிலிருந்து நாம் தவறவில்லை'

'அழிக்க முற்பட்டவர்களை அழித்தே தீருவோம்'

'இந்தியா செல்லும் பாதை சரியானது என்பதை உலக நாடுகளுக்கு உணர்த்துவோம்'

புதுடில்லி, டிச. 11—

"வெளிநாட்டினர் நமக்குத் தரும் உதவியைவிட நமது பணிகளை நாமே மேற்கொண்டு செயல்படக்கூடிய சுதந்தரமே நமக்கு முக்கியமாகும்.

"நமக்கு உதவி செய்துவரும் சில நாடுகளின் சொற்படி நாம் நடக்காததனால், நம்மீது அந்நாடுகள் சீற்றமடைந்திருக்கின்றன.

"போர் ஏற்பட்டுவிட்டதற்காகச் சில நாடுகள் நம்மீது பழிபோடுகின்றன; தங்களை, 'சனநாயக நாடுகள்' என்று இந்நாடுகள் கூறிக்கொள்கின்றன; ஆனால், சந்தர்ப்பம் வரும்போது அந்த சனநாயகத்தைக் காக்க அவர்கள் சுண்டுவிரலைக்கூட அசைக்க மறுக்கின்றன!

"ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்படும்போது அந்நாடுகள் அலட்சியமாக இருந்துவிடுகின்றன; இப்போதுகூட, நியாயத்தையும் -- அநியாயத்தையும் அவைகள் புரிந்து கொள்ள மறுக்கின்றன.

"நமது அண்டை நாடான வங்கதேசம் முழுவதுமே அழிக்கப்படும் ஒரு சூழ்நிலையில், கைகட்டிக்கொண்டிருக்க நம்மால் இயலாது.

"விடுதலைக்குப் பாடுபடும் வங்கதேச மக்களை, இராணுவ பலம் முழுவதையும் பயன்படுத்தி அடக்கப் பாகிஸ்தான் முனைந்துள்ளது; ஆயினும், வங்கதேச மக்களின் சுதந்தரத்துக்கு உதவி செய்து -- அவர்களை சமாதானமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழவைப்பது என்று இந்தியா உறுதி கொண்டிருக்கிறது; இந்தியாவின் இந்த உறுதியை உலகத்தின் எந்தச் சக்தியாலும் குலைத்துவிட முடியாது.

"வெளிநாட்டினரின் அறிவுரையைக் கேட்பதற்கு நாம் தயாராகவே இருக்கிறோம்; ஆனால் அது, நமது தேசிய நலனுக்குத் தீங்கு செய்யாததாக இருக்கவேண்டும்; நாம் செல்லும் பாதை சரியானது என்பதை உலகுக்கு உணர்த்தப்போகிறோம் -- மெய்ப்பிக்கப் போகிறோம்.

"ஐ. நா.-வில் பல நாடுகளும் இந்தியாவுக்கு எதிராக வாக்களித்தன; அவைகள்மீது நமக்குக் கோபமில்லை; 'போர் நின்று சமாதானம் நிலவவேண்டும்' என்று அவைகள் விரும்புகின்றன.

"ஆனால், வங்க தேசப் பிரச்சினைக்காக இந்தியா எட்டு மாதங்கள் காத்திருந்தது; ஏராளமான அகதிகள் இந்தியாவுக்கு வந்து, 'அது ஓர் உள்நாட்டுப் பிரச்சினை' என்ற கூற்றைப் பொருளற்றதாக்கிவிட்டது; இந்தத் துணைக் கண்டத்தில் நிலவும் நிலைமை குறித்து, இந்த நாடுகளிடம் நாம் அவ்வப்போது எடுத்துக்கூறியிருந்தோம்.

"ஆனால் இப்போது அவை, போர் மூளும் என்று நாம் கூறவில்லை என்று குற்றஞ்சாட்டுகின்றன; போர் மூளக்கூடிய ஒரு சூழ்நிலையில் நிலைமை இருப்பதாக நாம் தெரிவித்திருக்கிறோம்.

"பல நாடுகளும் பாகிஸ்தான் நலனைக் கருதியோ அல்லது தத்தம் சுயநலனைக் கருதியோ பேசாமல் இருந்துவிட்டன; வங்க தேச மக்களின் நலனும் தங்கள் நலனுக்குத் தேவை என்று அவை உணர மறுக்கின்றன.

"நமக்குப் பாகிஸ்தானிடம் விரோதமில்லை; பாகிஸ்தானைப் பிரிக்க வேண்டுமென்பதில் இந்திய மக்களுக்குச் சிறிதும் விருப்பமில்லை.

"பஞ்சம் -- பட்டினி -- அறியாமை போன்ற பிரச்சினைகள் இரு நாடுகளுக்கும் ஒரே மாதிரியானதாகும்.

"இந்தியா அமைதியையே விரும்புகிறது; ஆனால், அமைதிக்காகப் போர்புரிய வேண்டிய ஒரு நெருக்கடி நம்மீது திணிக்கப்பட்டிருக்கிறது.

"சனநாயகம் -- மதச் சார்பின்மை -- பாகுபாடற்ற சமுதாயம் -- கூட்டுச் சேராமை போன்ற உயர்ந்த இலட்சியங்களுக்காக நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்; மக்களின் ஒருமைப்பாடும் உறுதியும் இருந்தால் நாம் இதில் வெற்றி பெறுவது நிச்சயம்!"

—தலைமையமைச்சர் இந்திரா காந்தி
(மாணவர்களிடையே)

மண்ணெண்ணெய்க்குப் பங்கீட்டு முறை

விரைவில் அட்டைகள் வழங்கப்படும்

சென்னை, டிச. 11—

"மண்ணெண்ணெய் விற்பனை, முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும்; மண்ணெண்ணெய்ப் பங்கீட்டு அட்டைகள் விரைவில் அச்சிட்டு வழங்கப்படும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

அவையில் அவர் தாக்கல் செய்த ஓர் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:—

"ஒரு குடும்பத்துக்குத் தேவையான அளவை நிர்ணயித்து பங்கீட்டு அட்டைகள் அச்சிட்டு வழங்கச் சிறிது காலமாகும்; அதுவரையில், கூட்டுறவு விற்பனை நிலையங்கள் வழியாகவும், அரசு விநியோக நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்படும்.

"மண்ணெண்ணெயைப் பதுக்கும் வாய்ப்பைக் குறைக்கும் வகையில் ஒருவருக்கு மூன்று லிட்டருக்குமேல் கொடுக்கக் கூடாது என்று வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

"சில்லறை வியாபாரிகட்கு 200 லிட்டருக்குமேல் வழங்காதிருக்குமாறு மொத்த விற்பனையாளர்கட்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

"தேவையான அளவுக்குமேல் மண்ணெண்ணெய் வாங்காதிருக்குமாறும், தட்டுப்பாட்டைச் சமாளிக்கும் பொருட்டு வேறு எரிபொருளைப் பயன்படுத்துமாறும் பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்."

மண்ணெண்ணெயைப் பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை

மத்திய அரசு உத்தரவு

புதுடில்லி, டிச. 11—

மண்ணெண்ணெய் பயன்படுத்துவோருக்குச் சிரமம் ஏற்படாமல் தவிர்க்கும்பொருட்டு மண்ணெண்ணெய் வழங்குவதற்கும் பங்கீட்டு ஏற்பாட்டை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவருமாறு மத்திய அரசு, மாநில அரசுகட்கு யோசனை கூறியிருக்கிறது.

மண்ணெண்ணெயைப் பதுக்குவது — அதிக விலைக்கு விற்பது — துஷ்பிரயோகம் செய்வது போன்ற குற்றங்களைச் செய்வோர்மீது பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மிகக் கடுமையாக எடுக்குமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

போலீசார் எச்சரிக்கை

சென்னை, டிச. 11—

மண்ணெண்ணெயைப் பதுக்கக் கூடாது என்றும், லாரி போன்றவற்றுக்குத் தவருகப் பயன்படுத்தக்கூடாது என்றும் பொதுமக்களுக்குப் போலீசார் கடுமையான எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர்.

"இந்த வேண்டுகோளைப் புறக்கணிப்பவர்கள்மீது இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

கல்வி நிலையங்கள் மூடப்பட்டன

ஆசிரியர் — மாணவர்கட்குப் பாதுகாப்புப் பணியாம்

இராவல்பிண்டி, டிச. 11—

பாகிஸ்தானின் எல்லா பள்ளிகளையும்—கல்லூரிகளையும் மூடிவிடுமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

"மாணவரும் — ஆசிரியர்களும் சிவில் பாதுகாப்புப் பணிக்கு உதவி செய்ய வேண்டும்" என்று பாகிஸ்தான் அரசு அறிவித்திருக்கிறது.

வங்காள தேசம்— வல்லரசுகளின் நிலை

பிரஸ்ஸெல்ஸ், டிச. 11—

"பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்களாக உள்ள ஐந்து வல்லரசுகளும் — வெவ்வேறுவிதமான போக்குடையவையாக இருந்தாலும்-சுதந்தர வங்காள தேசப் பிரதிநிதிகளுடன் தொடர்புகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று உயர்தர வட்டாரங்களில்கூறப்பட்டிருக்கிறது.

சிந்து பகுதியில் 3,250 சதுர மைல்

இந்தியப் படை வசம் வந்தது

புதுடில்லி, டிச. 11—

இராசஸ்தானை ஒட்டியுள்ள பாகிஸ்தான் சிந்துப் பகுதியில் பார்மர் எல்லை நெடுகிலும் 210 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள காவல் நிலையங்கள் எல்லாவற்றையும் இந்தியத் துருப்புக்கள் பிடித்துவிட்டன.

பார்மர் பகுதிக்கு எதிரே பாகிஸ்தான் சிந்தும் பகுதிக்குள் 2,250 சதுர கிலோ மீட்டர் பகுதியும், கட்ச் — பனஸ்கந்தா எல்லையோரங்களில் சுமார் 1,000 சதுர கிலோ மீட்டர் பகுதியும் இந்திய இராணுவத்தின் வசம் வந்துவிட்டது.

இரண்டு கிராமங்களில் மக்களைக் காணோம்

சண்டிகார், டிச. 11—

பாசில்கா எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் கடந்த டிசம்பர் 3-ம் நாள் தாக்குதல் நடத்தியதிலிருந்து இரண்டு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அனைவருமே காணமற்போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானுக்குச் செய்தித் தொடர்பு

இலண்டனிலிருந்து துண்டிப்பு

இலண்டன், டிச. 11—

இலண்டனுக்கும் — இடையே 'டெலெக்ஸ்' உட்பட எல்லா செய்தித் தொடர்பும் அற்றுப் போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது

ஐ. நா. தீர்மானம்

பாகிஸ்தான் விதிக்கும் நிபந்தனை

ஐ. நா., டிச. 21—

அண்மையில் ஐ.நா. பொதுச் சபையில் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பாகிஸ்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறதாம்.

ஆனால் அது ஒரு நிபந்தனையையும் விதித்துள்ளது.

"இந்தியா—பாகிஸ்தான் இரு எல்லைகளிலும் ஐ.நா. பார்வையாளர்களை நிறுத்த வேண்டும்" என்று அது கூறியது.

இந்திரா அறிவிப்பு

"ஐ.நா. தீர்மானத்தை இந்தியா ஏற்கவோ—நிராகரிக்கவோ இல்லை" என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி டில்லியில் தெரிவித்தார்.

தளவாடத் தொழிற்சாலை பிடிபட்டது

நடுத்தர — சிறிய படகுகள் கைப்பற்றப்பட்டன

புதுடில்லி, டிச. 11—

கிழக்கு அரங்கில் நமது கடற்படையினர், எதிரியின் இரு பீரங்கிப் படகுகளைக் கைப்பற்றியுள்ளனர்.

சிட்டகாங் பகுதியில் மிக முக்கிய படைச்சாதனங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை கைப்பற்றப்பட்டிருக்கிறது.

மேலும் இரண்டு ஊர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன.

ஏராளமான நடுத்தர—சிறிய படகுகளும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

சிட்டகாங் துறைமுகம் மீது கப்பற்படை தாக்குதல்

புதுடில்லி, டிச. 11—

நேற்று சிட்டகாங் துறைமுகத்தை நமது கப்பற்படை பலமுறை தாக்கிச் சேதப்படுத்தியிருக்கிறது.

மற்றும் காக்ஸ் பசார், சல்னு துறைமுகங்களையும் தாக்கிப் பல ஆயுத உற்பத்திச் சாலைகளையும் —ஒலிபரப்பு இயந்திரங்களையும் இந்தியக் கடற்படை அழித்திருக்கிறது.

வங்காள தேசத்தில் விடுவித்த பகுதிகள்

புதுடில்லி, டிச. 11—

வங்காள தேசத்தின் வடமேற்குப் பகுதியில் சுமார் 3,520 சதுர கிலோ மீட்டர் பரப்பை இந்திய இராணுவத்தினர் விடுவித்திருக்கிறார்கள்.

இதுவரையில் சுமார் 1,500 பாகிஸ்தானியப் படையினரும் — ரஜாக்கர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்; 8 பாகிஸ்தானிய அதிகாரிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

தம்பி—உன்னை அழைக்கிறேன்!

களத்திலே நின்று கடும் போரிடுகின்றனர்—மாவீரர்கள்!

குருதி கொட்டுகின்றனர் — நாட்டைக் காத்திட!

உயிரை இழந்துவிட்டனர்—உத்தமர் பலர்!

★

வீரமிகு போரினில் வெற்றி நாம் பெற்றிட—

பொன்னும் பொருளும் திரட்டிப்

போர் நிதிக்குத் தர வேண்டும்

—பேரறிஞர் அண்ணா

[சீனப் படையெடுப்பின்போது அண்ணா அவர்கள் விடுத்த வேண்டுகோள் இன்றைக்கும் பயன்படும் என்று எண்ணி மேலே கொடுத்துள்ளோம்]

— ஆசிரியர்

சீன ஏட்டின் பிதற்றல்

இந்தியாவுக்கு எச்சரிக்கையாம்!

ஹாங்காங், டிச. 11—

சீன அரசின் 'பீப்பிள்ஸ் டெய்லி' என்ற ஏடு, இந்தியாவை எச்சரித்து விமர்சனம் ஒன்றை எழுதியிருக்கிறது; அதில் கூறப்பட்டிருப்பதாவது:—

"ஐ. நா. 'போர் நிறுத்தத் தீர்மானத்தை இந்தியா ஏற்றுக் கொள்ள வேண்டும்; அல்லது, மானக்கேடான தோல்வியை எதிர்நோக்கவேண்டும்.

"உலகத்தின் கருத்தை மீற முடியுமென்று நீங்கள் நினைத்தால் — சோஷலிஸ்டு ஏகாதிபத்திய நாடான சோவியத் இரஷ்யாவின் பக்கபலத்துடன் நினைத்ததைச் செய்ய முடியுமென்று நினைத்தும் போர்ப் பாதையிலேயே சென்றுகொண்டிருந்தால் — இறுதியில், மானக்கேடான தோல்வியையே நீங்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

"பாகிஸ்தானின் நியாயமான போராட்டத்தைச் சீன அரசும் —

நடுநிலை வகிக்கும் பிரிட்டன்— அவசரப்பட விரும்பவில்லையாம்

இலண்டன், டிச. 11—

"நமது நண்பர்களான இந்தியா —பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையே சமாதானத்தை ஏற்படுத்த எல்லா முயற்சியும் செய்யப்படுகிறது"

என்று பிரிட்டிஷ் தலைமையமைச்சர் ஹீத் கூறியிருக்கிறார்.

"ஆனால், அவசரப்பட்டு ஒருவரை ஆதரிக்கவோ—எதிர்ப்புக் கூறவோ பிரிட்டன் முன்வராது" என்றார் அவர்.

மக்களும் உறுதியாக ஆதரிக்கிறார்கள்.

"சீனாவுக்கு உள்ளேயோ வெளியிலோ, செஞ்சீனா, தனது பொறுப்புக்களை நிறைவேற்றும்."

சீனா உதவிக்கு வருமா?

"இன்று எழுந்துள்ள நெருக்கடியில், பாகிஸ்தானுக்கு உதவி செய்வதற்கான நடவடிக்கைகளை சீனக் குடியரசுத் தலைவர் மா — சே — துங்கும், தலைமையமைச்சர் சூ — யென் — லாயும் விரைவில் அறிவிப்பார்கள்"

என்று கராச்சியிலுள்ள சீனத் தூதுவர் கூறியதாகக் கொலோன் வானொலி அறிவித்திருக்கிறது.

இலட்சியத்துக்குப் போராடும் இந்திய வீரர்கள்

தலைமையமைச்சர் பாராட்டு

புதுடில்லி, டிச. 11—

களத்தில் வீரப் போர் புரியும் நமது படைகளுக்கு, தலைமையமைச்சர் இந்திரா காந்தி பாராட்டுத் தெரிவித்தார்.

வானொலியில் பேசுகையில் அவர் 'நாமே உங்களை நினைத்துப் பெருமைப்படுகிறது' என்றார்.

"மதத்தின் பேரால் ஓலமிடும் பாகிஸ்தான் இராணுவ ஆட்சிக்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள வங்க மக்களே சரியான அடி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

"எல்லா மதத்தினரும் சமம்— ஒவ்வொருவரும் சகோதரர்கள் — என்ற உயர்ந்த இலட்சியத்துக்காக நீங்களும் நாங்களும் போரிடுகிறோம் என்பதை நீங்கள் உணரவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

டாக்காவிலிருந்து வெளியேறும் அந்நியர்கள்

கல்கத்தாவில் இறங்கிச் செல்ல வேண்டும்

புதுடில்லி, டிச. 11—

டாக்காவிலும் — கராச்சியிலுமிருந்து பிரிட்டிஷ் குடிமக்களும் — ஐ. நா. ஊழியர்களும் வெளியேறி வருகின்றனர்.

பல வெளிநாட்டு அரசுகள் கேட்டுக் கொண்டிருந்ததுக்கேற்ப, இந்திய விமானப் படை இன்று டாக்காவை தாக்காது என்று உறுதி கூறப்பட்டிருக்கிறது.

ஆனால், டாக்காவுக்குச் செல்லு முனபும — திரும்பி வரும்போதும கல்கத்தாவில் இறங்கிப் போக வேண்டும் என்று இந்திய அரசு நிபந்தனை விதித்திருக்கிறது; நிபந்தனையை நிறைவேற்றுதவர்களுக்குப் பாதுகாப்பு உறுதி தரப்படாது என்றும் அரசு விளக்கியிருக்கிறது.

நாட்டின் நலனுக்கு உறுதி!

புதுடில்லி, டிச. 11—

"அமெரிக்கா போன்ற நாடுகள் நமக்கு எதிரிடையாகக் காட்டி வரும் மனப்பான்மையின் விளைவுகளைச் சமாளித்து நமது நாட்டு நலன்களை உறுதி செய்வதற்கு உரிய இராசதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன"

என்று மக்களவையில் அமைச்சர் இராஜ்பகதூர் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-1) [illegible]